
**ஜூன் – 22**

# TNPSC துளிகள்

- கூகுள் நிறுவனம் தனது முதன்முதலான பாதுகாப்பு பொறியியல் மையத்தினை (GSEC) ஐதராபாத்தில் உள்ள ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் தொடங்கியது.
- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) ஆனது, IIFL செகியூரிட்டீஸ் நிறுவனத்தின் இயக்குனரான சஞ்சீவ் பாசினை, front running (வர்த்தகம் சார் தகவல் திருட்டு) எனும் சட்டவிரோத வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதால் அவருக்குப் பங்கு வர்த்தகத்தில் ஈடுபட தடை விதித்துள்ளது.
- சிறுபான்மையினர் விவகாரங்கள் அமைச்சகமானது அதிகாரமளித்தல், உள்ளடக்கம் மற்றும் கலாச்சாரப் பெருமையுடன் கூடிய ஒன்றிய அரசாங்கத்தின் 11வது ஆண்டு நிறைவை நன்கு குறிக்கும் வகையில் புது டெல்லியில் லோக் சம்வர்தன் பர்வ் எனும் நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளது.
- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (NATO), பால்டிக் ஆபரேஷன்ஸ் 2025 (BALTOPS 25) பெரிய அளவிலான வருடாந்திர பன்னாட்டு இராணுவப் பயிற்சியானது லாத்வியா நாட்டில் நடைபெற்றது.
- ஹம்லே புல்புல் என்று வெகு பிரபலமாக அறியப்படும் புகழ்பெற்ற காஷ்மீர் பாடகர் உஸ்தாத் குலாம் நபி ஷா காலமானார்.
- அமெரிக்காவைச் சேர்ந்த வரலாற்றாசிரியர் ஆட்ரி ட்ருஷ்கே, "India: 5000 Years of History on the Subcontinent" என்ற தலைப்பிலான ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- அமெரிக்க இராணுவத்தின் 250வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், 2025 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் தேதியன்று வாஷிங்டன் D.C. நகரில் அமெரிக்க நாட்டு இராணுவ அணிவகுப்பானது நடைபெற்றது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு டெல்டா பகுதியில் மண் பரிசோதனை





- இந்த மிக முக்கியமான வேளாண் பகுதியில் விவசாயிகளிடையே நிலவும் குறைவான விழிப்புணர்வு மண் ஆரோக்கியத்தையும் பயிர் உற்பத்தித் திறனையும் தொடர்ந்து பாதிக்கிறது.

- மத்திய அரசின் மண் வள அட்டை (SHC) திட்டம் மற்றும் தமிழ்நாட்டின் தமிழ் மண் வள இணைய தளம் ஆகிய இரண்டும் இந்தப் பரிசோதனையை மேற்கொள்கின்றன.
- ஆனால், 2024-25 ஆம் ஆண்டில் நாகப்பட்டின மாவட்டத்தில் 7,900 அட்டைகளும், மயிலாடுதுறையில் 7,350 அட்டைகளும் மட்டுமே உருவாக்கப்பட்டன.
- கடைசியாக மாநில அளவிலான பெருமளவிலான மண் மாதிரி 2018–19 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- தமிழ் மண் வளம் இணைய தளத்தில் ஒவ்வொரு கிராமத்திற்குமான மண் தரவுகள் இருந்தாலும், அதில் பெரும்பாலானவை துல்லியமானதாக இல்லை.
- மயிலாடுதுறை மாவட்டத்தில் அதற்கெனச் சொந்த ஆய்வகம் இல்லை என்பதால் அது நாகப்பட்டினத்தினைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## விக்சித் பாரத் கா அம்ரித் கால் அறிக்கை




- 'விக்சித் பாரத் கா அம்ரித் கால் - சேவா, சுஷாசன் ஔர் கரிப் கல்யாண்' என்ற ஒரு தலைப்பிலான ஆவணம் ஆனது, பிரதமரின் 11 ஆண்டுகாலத்திய ஆட்சியின் கீழ் மேற் கொள்ளப் பட்ட முக்கிய சாதனைகள் மற்றும் அடித்தட்டு மக்கள் நிலையிலான அதன் தாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது.
- 2024 ஆம் ஆண்டில் 61,000 கோடி ரூபாய் மதிப்பிலான கடன்கள் வழங்கப்பட்டன என்ற நிலையில் இது 2018 ஆம் ஆண்டில் 14,431 கோடி ரூபாயாக இருந்தது.
- அரசானது 2019 ஆம் ஆண்டில் 100 சதவீதம் திறந்தவெளிக் கழிப்பிடமற்ற நாடு என்ற நிலையையும், 2025 ஆம் ஆண்டில் அனைத்து வீடுகளுக்கும் LPG இணைப்பை வழங்கிய அரசு என்ற நிலையையும் எட்டியது.
- 81 கோடி மக்கள் இலவச உணவு தானியங்களைப் பெறுகிறார்கள், அதே நேரத்தில் சுவச் பாரத் திட்டத்தின் கீழ் 12 கோடி கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.
- 15 கோடிக்கும் மேற்பட்ட வீடுகளுக்குக் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு உள்ளன.
- அரசாங்கம் செயல்படுத்தியுள்ள வீட்டு வசதித் திட்டமான PMAY திட்டத்தின் கீழ் 4 கோடிக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

- முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் சிறு தொழில்முனைவோருக்கு சுமார் 52 கோடிக்கும் அதிகமான கடன்கள் வழங்கப்பட்டன.

## இந்தியாவின் 16வது மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான அறிவிப்பு




- மத்திய அரசானது மக்கள்தொகைக் கணக்கெடுப்பை நடத்துவதற்கான நிர்ணயிக்கப் பட்ட தேதிகளை அறிவித்து அதிகாரப்பூர்வ அரசிதழினை வெளியிட்டது.
- ஓர் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி, சாதி வாரியான எண்ணிக்கை கணக்கெடுப்புடன் கூடிய இந்தியாவின் 16வது மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆனது 2027 ஆம் ஆண்டு மார்ச் 01ஆம் தேதியன்று மேற்கொள்ளப்படும்.
- இந்த மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான நிர்ணயிக்கப்பட்ட தேதியானது 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் முதல் நாளின் 00.00 மணியாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஒன்றியப் பிரதேசமான லடாக் மற்றும் பனிப்பொழிவு காணப்படும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைச் சாத்தியமற்ற ஜம்மு காஷ்மீர் மற்றும் இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களின் பகுதிகளுக்காக நிர்ணயிக்கப்பட்டத் தேதி 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று 00:00 மணி ஆக இருக்கும்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆனது இரண்டு கட்டங்களாக நடத்தப்படவுள்ளது.
- 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆனது, இந்தியாவின் வரலாற்றில் அலைபேசிச் செயலிகள், இணைய தளம் சார்ந்த வகை சுயக் கணக்கெடுப்பு மற்றும் நிகழ்நேர வகை கண்காணிப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி நடத்தப்படுகின்ற முதல் எண்ணிம அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பாக இருக்கும்.
- இது 1931 ஆம் ஆண்டிற்குப் பிறகு, முதல் முறையாக அனைத்துச் சமூகங்களுக்குமான சாதித் தரவுகளை சேகரிக்கவும் உள்ளது.
- 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆனது மிகவும் முதல் முறையாக சுயப் பதிவை அனுமதிக்கத் திட்டமிட்டுள்ளது.
- குடும்ப உறுப்பினர்கள் அரசாங்க இணைய தளங்களில் பதிவு செய்து அதன் பிறகு இதில் உள்நுழையலாம் அல்லது தங்கள் சொந்த விவரங்களை நிரப்ப வேண்டி ஒரு செயலியைப் பயன்படுத்தலாம்.
- சுயமானப் பதிவுகள் முடிந்ததும், இந்த அமைப்பு ஆனது ஒரு பெரும் தனித்துவமான அடையாளக் குறியீட்டினை உருவாக்கும்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பாளர் தங்கள் வீட்டிற்கு வரும் போது சுயமானப் பதிவில் பங்கு கொண்ட நபர்கள் இந்த அடையாளக் குறியீட்டினை வழங்கினால் போதும்.

- 2011 ஆம் ஆண்டில் நில வரைபடங்கள் மற்றும் அதற்கான இடங்களின் பட்டியல்களை பயன்படுத்தியிருந்தாலும், 2027 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு ஆனது வீடுகளின் GPS குறியிடல் மற்றும் அதன் மீதான பரவல் இடைவெளிகளைத் தவிர்க்க என்று மெய்நிகர் அடைப்படையிலான புவியியல் பரவல் தடுப்பு அமைத்தல் ஆகியவற்றை அறிமுகப் படுத்துகிறது.
- 2027 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பாளர்கள் மாறுபட்ட வயது அல்லது நம்பத்தகாத குடும்ப எண்ணிக்கை அளவு போன்ற சில பிழைகளுக்கு எச்சரிக்கைகளைப் பெறுவர் என்ற நிலையில் இது நிகழ்நேரத் திருத்தங்களைச் சாத்தியமாக்கும்.
- புலம்பெயர்வுக்கான காரணங்களின் கீழ் பருவநிலை நிகழ்வுகள் அல்லது இயற்கைப் பேரழிவுகள் காரணமான புலம் பெயர்வு ஆகிய புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## உரிமத்தினை மீண்டும் இந்தியாவிற்கு மாற்றுதல் குறித்த SEBI திட்டம்




- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) ஆனது அதன் வெளிநாட்டில் உள்ள இந்திய நிறுவனத்தின் உரிமத்தினை மீண்டும் இங்கு இந்தியாவிற்கு மாற்றுதல் (Reverse flipping) மற்றும் ஊழியர் பங்கு உரிமைத் திட்டம் (ESOP) விதிமுறைகளில் பல மாற்றங்களை அங்கீகரித்தது.
- இது புத்தொழில் நிறுவனங்களுக்கான புதியப் பங்கு வெளியீட்டு (IPO) செயல்முறை என்பதை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய நிறுவனத்தின் உரிமத்தினை மீண்டும் இந்தியாவிற்கு மாற்றுதல் என்பது ஒரு இந்தியப் புத்தொழில் நிறுவனத்தின் உரிமையை ஒரு வெளிநாட்டு அதிகார வரம்பில் இருந்து இந்தியாவிற்கு மாற்றும் செயல்முறையாகும்.
- முன்னதாக, பொதுப் பங்குகள் வெளியீட்டில் விற்பனைக்கான முன்மொழிவு என்பது அங்கீகரிக்கப் பட்ட திட்டங்களின் கீழ் வாங்கப்பட்ட பங்குகளுக்கு ஓராண்டு குறைந்த பட்ச வைப்புக் காலத் தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டன.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## புளூட்டோவுக்கு அப்பால் பிளாஸ்மா - வாயேஜர் 1

- நாசாவின் வாயேஜர் 1 என்ற ஒரு விண்கலம் ஆனது சூரிய மண்டலத்தின் வெளிப்புற விளிம்பு பகுதியில் (ஹீலியோபாஸ்) அதிகளவில் வெப்பமடைந்த பிளாஸ்மா மீதான

ஒரு பரப்பினைக் கண்டறிந்தது.

- இந்த பிளாஸ்மா வியக்கத்தக்க வகையில் 30,000 முதல் 50,000 கெல்வின் வரை வெப்பப் படுத்தப் பட்டுள்ளது.
- இதில் ஹீலியோபாஸ் என்பது ஹீலியோஸ்பியர் எனப்படும் சூரியனின் பாதுகாப்புக் குமிழியின் வெளிப்புற விளிம்பை வரையறுக்கிறது.
- இங்கு சூரியனின் ஒரு தாக்கமானது சுமார் 24 பில்லியன் கிலோமீட்டர் தொலைவில் முடிவடையும் எல்லையாக ஹீலியோபாஸ் உள்ளது.
- 1977 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்ட வாயேஜர் 1 விண்கலமானது, விண்வெளியில் பயணித்து 2012 ஆம் ஆண்டில் சூரிய மண்டலத்தின் வெளிப்புறப் பகுதியில் உள்ள விண்வெளியில் நுழைந்தது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஐநா சபையின் பெருங்கடல் மாநாடு 2025 – முன்னெடுப்புகள்




- 3வது ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் மாநாடு (UNOC3) ஆனது சமீபத்தில் பிரான்சின் நைஸ் நகரில் நிறைவடைந்தது.

- இந்த நிகழ்வின் போது, One Ocean Finance மற்றும் அமைதியானப் பெருங்கடலுக்கான உயர் இலட்சியக் கூட்டணி ஆகியவை தொடங்கப்பட்டன.
- One Ocean Finance என்பது கடல்சார் பொருளாதாரத் துறைகள் மற்றும் பெருங்கடல் மறு சீரமைப்பிற்காக பில்லியன் கணக்கான நிலையான நிதியைத் திரட்டுவதற்கான ஒரு உலகளாவிய நிதி சார் முன்னெடுப்பாகும்.
- ஓர் அமைதியான பெருங்கடலுக்கான கூட்டணி என்பது அந்தப் பெருங்கடலின் ஒலி மாசுபாட்டைக் குறைப்பதற்கும் அங்கு கடல் சார் பல்லுயிர்ப் பெருக்கத்தில் அதன் தீங்கு விளைவிக்கும் தாக்கங்களைக் குறைப்பதற்கும் உறுதி பூண்டுள்ளது.
- கனடா மற்றும் பனாமாவால் தொடங்கப்பட்ட இது 35 இதர நாடுகளால் ஆதரிக்கப் பட்டது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## THE இதழின் தாக்கங்கள் தரவரிசை


- வெஸ்டர்ன் சிட்னி பல்கலைக்கழகம் (ஆஸ்திரேலியா) ஆனது தொடர்ந்து நான்காவது ஆண்டாக உலகளவில் தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- உலகளாவியத் தரவரிசையில் ஆசியாவானது பாதிக்கும் மேற்பட்ட சில இடங்களைப் பிடித்து ள்ளது.
- இந்தத் தரவரிசைகளில் முதல் 50 இடங்களில் 22 இடங்களை தற்போது ஆசியக் கல்வி நிறுவனங்கள் பிடித்துள்ளன.
- மொத்தம் 135 இந்திய நிறுவனங்கள் இந்த ஆண்டு THE தரவரிசையில் இடம் பெற்றன.
- இந்தியாவில் அமிர்தா விஸ்வ வித்யாபீடம் (41வது இடம்) மற்றும் லவ்லி புரொஃபஷனல் பல்கலைக்கழகம் (48வது இடம்) ஆகியவை சிறந்தச் செயல்திறன் கொண்டவையாக இடம் பெற்றுள்ளன.
- JSS உயர் கல்விக் கழகம் (48வது இடம்) மற்றும் ஷூலினி பல்கலைக்கழகம் (48வது இடம்) ஆகியவை முதல் 100 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளன.
- இதர இந்தியப் பல்கலைக்கழகங்கள் 100க்கும் பிறகான தரவரிசையில் இடம் பெற்று உள்ளன.

| Rank | University Name | Location |
|---|---|---|
| 1 | Western Sydney University | Australia |
| 2 | University of Manchester | United Kingdom |
| 3 | Kyungpook National University (KNU) | South Korea |
| =4 | Griffith University | Australia |
| =4 | University of Tasmania | Australia |
| =6 | Arizona State University (Tempe) | United States |
| =6 | Queen’s University | Canada |
| 8 | University of Alberta | Canada |
| =9 | Aalborg University | Denmark |
| =9 | Universitas Airlangga | Indonesia |


## WEF எரிசக்தி மாற்றக் குறியீடு 2025

- உலகப் பொருளாதார மன்றம் ஆனது எரிசக்தி மாற்றக் குறியீட்டை (ETI) வெளியிட்டது.

- எரிசக்தி தொடர்பான கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு கடந்த ஆண்டு 37.8 பில்லியன் டன்களாக உயர்ந்தது.
- சுவீடன், பின்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நோர்டிக் நாடுகள் ஆனது இந்த ETI குறியீட்டில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளன.
- இதற்கிடையில், ஒரு சாதனையாக சீனா 12வது இடத்தைப் பிடித்தது.
- 2024 ஆம் ஆண்டில் 63வது இடத்தில் இருந்த இந்தியா, தற்போது இதில் 71வது இடத்திற்கு சரிந்துள்ளது.
- "வளர்ந்து வரும் ஆசியா" என்ற பிரிவில் சீனா முதலிடத்தில் உள்ளது.




## எண்ணெய் 2025 - IEA அறிக்கை




- சர்வதேச எரிசக்தி முகமை (IEA) எண்ணெய் 2025 அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2024 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உலகளாவிய எண்ணெய்த் தேவை என்பது ஒரு நாளைக்கு சுமார் 2.5 மில்லியன் பீப்பாய்கள் (mb/d) அதிகரிக்கும் என்று

கணிக்கப்பட்டுள்ளது.

- அதே நேரத்தில், உலகளாவிய எண்ணெய் உற்பத்தி திறன் ஆனது, 2030 ஆம் ஆண்டில் 5 mb/d அளவிற்கும் அதிகமாக அதிகரித்து சுமார் 114.7 mb/d என்ற ஒரு அளவினை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் எண்ணெய்த் தேவையானது, கணிப்புக் காலத்தில் 1 mb/d என்ற அளவில் கடுமையாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2024 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உலகளாவிய உயிரி எரிபொருள் உற்பத்தி 680 kb/d அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் எத்தனால் உற்பத்தி வளர்ச்சியானது, முறையே 140 kb/d மற்றும் 100 kb/d அதிகரித்து, மிகவும் முன்னணியில் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# மாநிலச் செய்திகள்

## செயல்திறன் தரக் குறியீடு (PGI) 2.0

**Top 5 Performance Grading Index 2.0 for States/UTs**

| State/UT | 2023-24 Score | 2022-23 Score | Grade 2023-24 |
|---|---|---|---|
| Chandigarh | 703 | 687.8 | Prachesta-1 |
| Punjab | 631.2 | 614.1 | Prachesta-3 |
| Delhi | 623.7 | 579.3 | Prachesta-4 |
| Gujarat | 614.4 | 602.2 | Prachesta-5 |
| Odisha | 595.6 | 584.5 | Prachesta-6 |

**Bottom 5 Performance Grading Index 2.0 for States/UTs**

| State/UT | 2023-24 Score | 2022-23 Score | Grade 2023-24 |
|---|---|---|---|
| Meghalaya | 417.9 | 401.6 | Akanshi-3 |
| Arunachal Pradesh | 461.4 | 439.6 | Akanshi-2 |
| Mizoram | 464.3 | 471.6 | Akanshi-2 |
| Nagaland | 468.6 | 446.4 | Akanshi-2 |
| Bihar | 472 | 484.1 | Akanshi-2 |

**Highlights**

States/UTs are categories into 6 categories – Daksh, Utkarsh, Atti-uttam, Prachesta (divided into 3 sub categories), Akanshi (divided into 3 sub categories)


- No States/ UT achieved the top 3 grades – Daksh, Utkarsh, Atti-uttam
- 11 States/ UT achieved Prachesta, of which 10 are in Prachesta-3 (the lowest within this grade)
- 25 States/ UTs are in the lowest grade Akanshi of which 1 in the Akanshi-3 (lowest of the grades)
- Meghalaya is the only State in the lowest grade (Akanshi-3)
- 10 States/ UTs are in the Akanshi-2 the second lowest among the grades
- 14 States/ UTs in the Akanshi-1 (the top grade within Akanshi, which is the lowest grade)
- The prominent States in Akanshi-1 include Andhra Pradesh (562.2), Madhya Pradesh (532.8), Tamil Nadu (559.2), Uttar Pradesh (528.1) & West Bengal (533.8)

- 2017 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட PGI குறியீட்டினைக் கல்வி அமைச்சகம் ஆனது 2021 ஆம் ஆண்டில் PGI 2.0 என மறுசீரமைத்தது.
- கல்வித் துறை அமைச்சகத்தின் பள்ளிக் கல்வி குறிகாட்டிகளின் மிகச் சமீபத்திய ஒரு மதிப்பீட்டில் சண்டிகர், பஞ்சாப் மற்றும் டெல்லி ஆகியவை முதல் மூன்று இடங்களில் இடம் பெற்றன.
- 2021-22 ஆம் ஆண்டில் சண்டிகர் 659 மதிப்பெண்களுடன் இதில் முதலிடத்தில் இருந்தது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து பஞ்சாப் (647.4) மற்றும் டெல்லி (636.2) உள்ளன.
- சுமார் 761 மற்றும் அதற்கு மேற்பட்ட உயர் மதிப்புகளில் எந்த மாநிலமும்/ஒன்றியப் பிரதேசமும் மதிப்பெண் பெறவில்லை.

- 521-580 என்ற நடுத்தர வரம்பில் உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகியவை இருந்தன.
- மிகக் குறைந்த மதிப்பெண் பெற்ற மாநிலம் மேகாலயா (417.9) ஆகும்.
- அதற்கு சற்று மேலான ஒரு மதிப்பில் அருணாச்சலப் பிரதேசம் (461.4), மிசோரம் (464.2), நாகாலாந்து (468.6), மற்றும் பீகார் (471.9) ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## 2025 ஆம் ஆண்டிற்கான ஷிப்கி லா கணவாய் திறப்பு

- சமீபத்தில் இமாச்சலப் பிரதேசம் ஆனது, ஷிப்கி லா கணவாய் பகுதியை உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறந்துள்ளது.
- இது கடல் மட்டத்திலிருந்து 3,930 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.
- இந்தக் கணவாய் 15 ஆம் நூற்றாண்டிலிருந்து ஆவணப்படுத்தப்பட்ட வர்த்தகத்தின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது.
- இது கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்கான மிகவும் சாத்தியமான பாதையாகவும் விளங்குகிறது.
- இது இந்தியாவிற்கும், திபெத்திற்கும் இடையிலான ஒரு வர்த்தக வழித்தடமாகப் பயன் படுத்தப் பட்டது.
- இந்தப் பாதையின் பயன்பாடானது, முதன்முதலில் 1962 ஆம் ஆண்டில் சீன-இந்தியப் போருக்குப் பிறகு தடை செய்யப்பட்டது.





## 2025 ஆம் ஆண்டில் ஒடிசாவில் காலரா பெருந்தொற்று


- ஒடிசாவின் எட்டு மாவட்டங்களில் பதிவாகியுள்ள வயிற்றுப் போக்குப் பெருந்தொற்று ஆனது அந்த மாநிலத்தின் பொதுச் சுகாதார நடவடிக்கைகளுக்கான ஒரு கடுமையான சவாலாக உருவெடுத்துள்ளது.
- பல பகுதிகளில் கொடிய விப்ரியோ காலரா (காலரா) பாக்டீரியப் பாதிப்பு ஏற்பட்டு உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
- ஒடிசா மாநிலத்தில் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மற்றும் 2022 ஆம் ஆண்டு ஜூலை

- நவம்பர் ஆகிய மாதங்களில் காலரா பரவியது.

- காலரா என்பது விப்ரியோ காலரே என்ற ஒரு பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு தொற்று நோயாகும்.
- இது அசுத்தமான உணவு மற்றும் நீரின் மூலம் பரவுகிறது.




## காற்றாலை மின் உற்பத்தித் திறன் வளர்ச்சி 2024/25





- 2024-25 ஆம் ஆண்டிற்கான புதிய காற்றாலை மின் உற்பத்தித் திறன் மீதான சேர்ப்பில் கர்நாடகா மாநிலம் இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.
- இது அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் அதிகபட்சமாக 1,331.48 மெகாவாட் மின் உற்பத்தி திறனை உருவாக்கியுள்ளது.
- தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகியவை முறையே 1,136.37 மெகா வாட் மற்றும் 954.76 மெகா வாட் திறன் உருவாக்கத்துடன் அதனைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன.

- இந்தியா தற்போது 51.5 ஜிகாவாட் காற்றாலை மின் உற்பத்தி திறனைக் கொண்டு உள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 500 GW அளவிலானப் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை எட்டுவதே நாட்டின் இலக்காகும்.
- இதில் காற்றாலை மின் உற்பத்தியில் இருந்து 100 GW, கடல்சார் மூலங்களிலிருந்து 30 GW ஆற்றல் உற்பத்தி செய்யப்படும்.
- மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில், சூரிய மின் உற்பத்தித் திறன் 31.49 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- இந்தியா நிறுவப்பட்டக் காற்றாலை ஆற்றல் சார் மின் உற்பத்தி திறனைக் கொண்ட நான்காவது பெரியதொரு நாடாகவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனில் உலகின் மூன்றாவது பெரிய நாடாகவும் உள்ளது.
- இங்கு சூரிய மின்னாற்றல் உற்பத்தியைத் தொடர்ந்து இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் காற்றாலை மின் உற்பத்தி இரண்டாவதாக பெரும் பங்களிப்பை வழங்குகிறது.
- குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவை புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் அதிக திறன் கொண்ட மாநிலங்களாக உள்ளன.

# இதரச் செய்திகள்

## FASTag வருடாந்திர அனுமதி வசதி





- மத்திய அரசானது, தனியார் வாகனங்களுக்கு சுமார் 3,000 ரூபாய் விலையில் FASTag அடிப்படையிலான வருடாந்திர அனுமதி வசதியை அறிமுகப்படுத்த உள்ளது.
- இந்த ஒரு அனுமதியானது வணிக ரீதியல்லாத தனியார் பயன்பாட்டு வாகனங்களுக்கு

அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

- இது ஓராண்டு காலத்திற்கு அல்லது 200 பயணங்களுக்கு எது முதலில் பதிவாகிறதோ அதுவரை செல்லுபடியாகும்.
- செயலாக்கம் மற்றும் புதுப்பித்தலுக்கானப் பிரத்தியேக இணைப்பு ஆனது விரைவில் இராஜ்மார்க் யாத்ரா செயலியில் கிடைக்கப் பெறும்.

## கேப்டன் குக்கின் நீண்டகாலமாக தொலைந்து போன கப்பல்

- 250 ஆண்டுகளுக்குப் பிறகு, கேப்டன் ஜேம்ஸ் குக்கின் நீண்ட காலமாக தொலைந்து போன கப்பலான HMS எண்டெவர், அமெரிக்காவில் உள்ள ரோட் தீவின் நியூபோர்ட் துறைமுகத்தின் கடற்கரையில் கண்டறியப்பட்டுள்ளது.
- முதலில் கிழக்கு ஆஸ்திரேலியாவை அடைந்த முதல் ஐரோப்பியக் கப்பல் (1768-1771) இதுவாகும்.
- பின்னர் லார்ட் சாண்ட்விச் என மறு பெயரிடப்பட்ட இது 1778 ஆம் ஆண்டில் அமெரிக்க சுதந்திரப் போரின் போது கடலில் மூழ்கியது.




## தென்னிந்தியாவின் பருத்தி ஆலைகளில் முதல் பதிவு செய்யப்பட்ட வேலை நிறுத்தம்

- 1892 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ்காரர்களுக்குச் சொந்தமான பருத்தி நூற்பு ஆலையான புகழ்பெற்ற மதுரா மில்ஸ் மதுரையில் நிறுவப்பட்டது.
- தென்னிந்தியாவின் பருத்தி ஆலைகளில் மதுரைப் பெண்கள் இங்கு முதலாவது பதிவு செய்யப் பட்ட வேலை நிறுத்தத்தை நடத்தினர்.
- 1920 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 முதல் ஜூன் 10 ஆம் தேதி வரை நடைபெற்ற இந்த வேலை நிறுத்தம் ஆனது , தென்னிந்தியாவின் பருத்தி ஆலைகளில் பதிவு செய்யப்பட்ட முதல் வேலை நிறுத்தமாகும்.
- 1920 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் உருவாக்கம் ஆனது தொழிலாளர்களின் உரிமைகளுக்கான கோரிக்கையை மேலும்

வலுப்படுத்தியது.




## தேசிய அவசரநிலை அறிவிக்கப்பட்டதன் 50 ஆம் ஆண்டு நிறைவு




- இந்த ஆண்டானது 1975 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் தேதியன்று அவசரநிலை அமல் படுத்தப் பட்டதன் 50 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இது 1975 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் தேதியன்று அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குப் பிறகு அறிவிக்கப்பட்டது.
- 1971 ஆம் ஆண்டில் நாட்டின் அப்போதையப் பிரதமர் இந்திரா காந்தியின் மக்களவைத் தேர்வினை நீதிமன்றம் ரத்து செய்தது.
- 21 மாத காலம் நீண்ட தேசிய அவசரநிலையானது 1977 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் தேதி அன்று நீக்கப்பட்டது.
- இந்தியாவின் பாதுகாப்புக் காரணம் அல்லது அதன் ஒரு பகுதியானது போர், வெளிப் புறத் தாக்குதல் (இது வெளிப்புற அவசரநிலை) அல்லது ஆயுதக் கிளர்ச்சி (உள்நாட்டு அவசர நிலை) ஆகியவற்றால் அச்சுறுத்தப்படும்போது, 352வது சரத்தின் கீழ் குடியரசுத் தலைவரால் தேசிய அவசரநிலை பிரகடனப்படுத்தப் படுகிறது.

- இது 6 மாதங்களுக்கு நீடிக்கும் என்பதோடு மேலும் ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் காலவரையின்றி நீட்டிக்கப் படலாம்.
- 1975 ஆம் ஆண்டு 38வது திருத்தச் சட்டம் ஆனது, போர், வெளிப்புறத் தாக்குதல், ஆயுதம் ஏந்திய ஒரு கிளர்ச்சி அல்லது எதிர்வரும் அபாயம் ஆகியவற்றின் ஒரு அடிப்படையில் குடியரசுத் தலைவரால் அவசரகால பிரகடனங்களை அறிவிக்க அனுமதிக்கிறது.
- ஆனால், இங்கு 1978 ஆம் ஆண்டு 44வது திருத்தச் சட்டம் ஆனது, "உள்நாட்டுக் கலவரம்" என்பதை "ஆயுதமேந்தியக் கிளர்ச்சி" என்று மாற்றியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★